## ஜனவரி – 08 – திங்கள்

### ஆண்டவர் இயசுவின் திருமுழுக்கு

என் அன்பார்ந்த மைந்தன் நீயே உன்னொருட்டு நான் பூரிப்படைகின்றேன்'' (மாற்கு!:11)

---------------------------------------------------------------------

### முதல் வாசகம் : ஏசாயா 42 : 1 – 4, 6 – 7

இதோ! என் ஊழியர்! அவருக்கு நான் ஆதரவு அளிக்கிறேன் நான் தேர்ந்துகொண்டவர் அவர் அவரால் என் நெஞ்சம் பூரிப்படைகின்றது அவருள் என் ஆவி தங்கும்படி செய்தேன் அவர் மக்களினங்களுக்கு நீதி வழங்குவார். அவர் கூக்குரலிடமாட்டார் தம்குரலை உயர்த்தமாட்டார் தம் குரலொலியைத் தெருவில் எழுப்பவுமாட்டார். நெரிந்த நாணலை முறியார் மங்கி எரியும் திரியை அணையார் உண்மையாகவே நீதியை நிலை நாட்டுவார். 4 உலகில் நீதியை நிலைநாட்டும்வரை அவர் சோர்வடையார் மனம் தளரமாட்டார் அவரது நீதிநெறிக்காகத் தீவு நாட்டினர் காத்திருப்பர். ஆண்டவராகிய நான் நீதியை நிலைநாட்டுமாறு உம்மை அழைத்தேன் உம் கையைப் பற்றிப்பிடித்து, உம்மைப் பாதுகாப்பேன் மக்களுக்கு உடன்படிக்கையாகவும் பிற இனத்தா ருக்கு ஒளியாகவும் நீர் இருக்குமாறு செய்வேன். பார்வை இழந்தோரின் கண்களைத் திறக்கவும், கைதிகளின் தளைகளை அறுக்கவும், இருளில் இருப்போரைச் சிறையினின்று மீட்கவும் உம்மை அழைத்தேன்.

**பதில்பாடல் :** மீட்பருளும் ஊற்றுக்களிலிருந்து அகமகிழ்வோடு தண்ணீர் முகர்ந்து கொள்ளுங்கள்.

### இரண்டாம் வாசகம் : 1 யோவான் 5 : 1 - 9

அன்பார்ந்த பிள்ளைகளே! இயேசுதான் மெசியா என்று நம்புவோர் அனவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். பெற்றவரிடம் அன்பு செலுத்துவோர் பிள்ளைகளிடமும் அன்பு செலுத்துவர். நாம் கடவுள்மீது அன்புகொண்டு அவர் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும்போது, கடவுளின் பிள்ளைகள்மீதும் அன்பு கொள்கிறோம் என்பது நமக்குத் தெரியவரும். ஏனெனில் அவர் கட்டளைகளைக் கடைப்பிடிப்பதில்தான் கடவுள் அன்பு அடங்கியுள்ளது. அவர் கட்டளைகள் நமக்குச் சுமையாய் இருப்பதில்லை. ஏனெனில் கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும் உலகை வெல்லுவது நம் நம்பிக்கையே. இயேசு இறைமகன் என்று நம்புவோரைத் தவிர உலகை வெல்வோர் யார்? நீராலும் இரத்தத்தாலும் வந்தவர் இயேசு கிறிஸ்து. அவர் நீரால் மட்டும் அல்ல. நீராலும் இரத்தத்தாலும் வந்தவரென தூய ஆவியார் சான்று பகர்கிறார். தூய ஆவியாரே உண்மை. எனவே சான்று அளிப்பவை மூன்று இருக்கின்றன. தூய ஆவியும் நீரும் இரத்தமுமே அவை. இம்மூன்றும் ஒரே நோக்கம் கொண்டவை. மனிதர் தரும் சான்றை நாம் ஏற்றுக்கொள்கிறோமே! கடவுள் தரும் சான்று அதை விட மேலானது அன்றோ! கடவுள் தம் மகனுக்குச் சான்று பகர்ந்துள்ளார்.

### நற்செய்தி : மாற்கு 1 : 7 - 11

அக்காலத்தில் யோவான் அறிவித்ததாவது: ”என்னைவிட வலிமை மிக்க ஒருவர் எனக்குப்பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக் கூட எனக்குத் தகுதியில்லை. நான் உங்களுக்குத் தண்ணீரால் திருமுழுக்குக் கொடுத்தேன் அவரோ உங்களுக்குத் தூய ஆவியால் திருமுழுக்குக் கொடுப்பார்” எனப் பறைசாற்றினார். அக்காலத்தில் இயேசு கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்து யோர்தான் ஆற்றில் யோவானிடம் திருமுழுக்குப் பெற்றார். அவர் ஆற்றிலிருந்து கரையேறிய உடனே வானம் பிளவுபடுவதையும் தூய ஆவி புறாவைப் போல் தம்மீது இறங்கிவருவதையும் கண்டார். அப்பொழுது, ”என் அன்பார்ந்த மகன் நீயே, உன்பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.

**தியானம்:** இன்று ஆண்டவர் இயேசுவின் திருமுழுக்கு விழா. இறைமகன் இயேசுவின் மண்ணுலக வாழ்க்கையில் அதிமுக்கியமான ஒரு நிகழ்வை கொண்டாடுகின்றோம். இங்கேதான் பணிவாழ்வின் ஆரம்பம். தந்தையின் மகிழ்ச்சிக்குரலை இயேசு கேட்டார். “என் அன்பார்ந்த மைந்தன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்” (மாற்.1:11) என்ற வாழ்த்துரை இயேசுவின் காதில் விழுந்தது. தந்தை மகனில் எவ்வளவு பூரிப்படைகின்றார் என்பதை தூய ஆவியானவர் வெளிப்படுத்துகின்றார். இயேசுவின் வாழ்க்கையில் மாபெரும் திருப்பம் ஏற்படுகின்றது. முதல் வாசகத்தில் எசாயா கூறுவதுபோல் ஆண்டவரின் ஊழியனாக தன்னை ஒப்புக்கொடுக்கின்றார். தாம் அபிஷேகம் பண்ணப்பட்ட ஒரு ஊழியனாக இருந்தும் தாமும் மனித குலத்தின் ஒரு அங்கம் என்று உலகிற்கு வெளிக்காட்டினார். திருமுழுக்கின் மூலம் மகனாக, மகளாக அழைப்புப்பெற்ற நாமும் உண்மையான இறையனுபவம் பெற்றுள்ளோமா? எமது சக உறவுகளோடு ஒன்றித்து வாழ விளைகின்றோமா? அவ்வாறு வாழும்போதுதான் நீரே என் அன்பார்ந்த மகன், மகள் என்னும் வார்த்தை அர்த்தமுள்ளதாகும்.